# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.வி.மு.ச பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8093878

1. District மாவட்டம்: சென்னை    PS காவல்நிலையம்: CC-IV    Year ஆண்டு:    FIR No மு.த.அ. எண்: 2/2022/AC/CC-IV    Date நாள்: 18.10.2022

2. (i) Act சட்டம்:    Sections பிரிவுகள்: 7 of Prevention of
   (ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்: Corruption (Amendment)
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்: Act 2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்:

3. (a) Occurrence of Offence Day: குற்ற நிகழ்வு நாள் 12.10.2022    Date from: நாள் முதல்    Date to: நாள் வரை
   Time Period: நேர அளவு 10.45hrs    Time from: நேரம் முதல்    Time to: நேரம் வரை
   (b) Information Received at PS Date: காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.10.2022    Time நேரம்: 09.30hrs
   (c) General Diary Reference: Entry No(s) பொது நாட்குறிப்பின் பதிவு விவரம் எண்    Time நேரம்:

4. Type of Information: Written/ Oral: தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், திசையும்: 10KM West
   Beat Number: முறைக் காவல் எண்    (b) Address: முகவரி: Office of the Bill collector, Ward 151, Zone 11, Valsaravakkam Greater Chennai Corporation.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S: இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையின் அந்த கா.நி.பெயர்    District: மாவட்டம்

6. Complainant /Informant (a) Name: குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர் J. H. Nagesh    (b) Father's/ Husband's Name: தந்தை / கணவர் பெயர் Jesuarathinam
   (c) Date / Year of Birth: நாள் / பிறந்த ஆண்டு    (d) Nationality: நாட்டினம்    (e) Passport No.: வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue: வழங்கப்பட்ட நாள்    Place of Issue: வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation: தொழில் Advocate    (g) Address: முகவரி No. C3 Sriji Apartments, Manapakkam Main road, Manapakkam, Chennai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டுக்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Mr. Ganesan, Bill collector, Ward 151, Zone 11, Valasaravakkam, Greater chennai corporation.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்டுள்ளன சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்டுள்ளன சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the investigation / Refused investigation / transferred to PS ........................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளபடி பிரிவு 2ல் குறிப்பிட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுகிறது .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லைக் கருதி புலனாய்வுக்கு .................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

13/10/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 18.10.2022
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் at 10.35PM

Name: பெயர் C. JANSI RANI
Rank: நிலை Inspector No. எண் ..........

........Continuation of Column No.12 of FIR in Cr.No.2/2022/AC/CC-IV, dated 18.10.2022.

Honoured Sir,

On 18.10.2022 at about 09.30 hrs one Tr.J.H. Magesh, S/o Jesurathinam, No.C3, Sriji Apartments, Manapakkam Main Road, Manapakkam, Chennai-125 appeared before me and gave a written complaint, which runs as follows.

அனுப்புநர்

J.H,மகேஷ்,
த/பெ ஜேசுரத்தினம்,
ஊ3 ஸ்ரீஜி அப்பார்ட்மெண்ட்ஸ்,
மணப்பாக்கம் மெயின் ரோடு,
மணப்பாக்கம்,
சென்னை -600125

பெறுநர்

காவல் ஆய்வாளர் அவர்கள்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
ஆலந்தூர், சென்னை

நான் மணப்பாக்கத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனது மாமனார் திரு.இக்னேசியஸ் ஜோசப் என்பவருக்கு சென்னை பூத்தபேடு ராமாபுரம் அன்னை சத்யா நகரில் உள்ள காசி அப்பார்ட்மென்ட் என்ற

குடியிருப்பில் 9வது பிளாக் முதல் தளத்தில் 640 சதுர அடி கொண்ட வீடு இருந்தது. இந்த வீட்டை அவர் ஆவண எண். 4463/2009 மூலம் குன்றத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து அனுபவித்து வந்தார். அவர் 21.05.2021 அன்று இறந்து விட்டார். அவர் இறந்த பிறகு அவருடைய வாரிசுதாரர்களான 1) திருமதி.எலிசபத் ஜோஸ்வின் 2) திருமதி.ருத்மேரி ஜோசப் மற்றும் 3) திரு.சாலமன் செல்வம் ஆகியோர் அந்த வீட்டை திரு.விநாயகம் மற்றும் அவரது மனைவி திருமதி.அஞ்சுகம் ஆகியோருக்கு குன்றத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.19390/2022 மூலம் விற்றனர். அப்படி விற்கும் போது மேற்படி வீட்டிற்கு சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரியை முழுவதும் தாங்களே செலுத்துவதாக ஒப்புக்கொண்டனர். அதன் பேரில் திருமதி.அஞ்சுகம் மேற்படி வீட்டை சொத்து வரி மதிப்பீடு செய்வதற்கு சென்னை மாநகராட்சி வளசரவாக்கம் மண்டலம் வார்டு-151 அலுவலகத்தில் சென்று 10.10.2022 அன்று மனு கொடுத்தார். மேற்படி மனுவை பெற்றுக் கொண்ட பில் கலெக்டர் திரு.கணேசன் மேற்படி வீட்டை மதிப்பீடு செய்தால் 2011 ஆண்டு முதல் வீட்டு வரி செலுத்த வேண்டும் என்றும் அதற்கு ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேல் ஆகும் என்று அவரிடம் கூறியுள்ளார். அதனை கேட்ட திருமதி.அஞ்சுகம் அந்த வீட்டை விற்ற எங்களிடம் வந்து வீட்டு வரி தொடர்பாக மாநகராட்சி அலுவலகத்தில் தொடர்புக் கொண்டு வீட்டு வரியை

இந்நாள் வரை சரியாக கட்டி கொடுக்குமாறு எங்களிடம் தெரிவித்தார். நான் அதனால் 11.10.2022 அன்று காலை சுமார் 11.40 மணி அளவில் வார்டு -151 வளசரவாக்கம் மாநகராட்சி அலுவலகத்திற்கு சென்று மேற்படி வீட்டிற்கு வீட்டு வரி மதிப்பீடு செய்து தருமாறு திரு.கணேசனிடம் கேட்டேன். அதற்கு அவர் வீட்டு வரி மதிப்பீடு செய்ய வர வேண்டும் என்றால் ரூ.10,000/- தனக்கு லஞ்சமாக தர வேண்டும் என்று கூறினார். மேலும் அப்போதுதான் வீட்டு வரி மதிப்பீட்டு வேலையை ஆரம்பிப்பேன் என்று கூறினார். நான் அவரிடம் எதும் கூறாமல் திரும்பி வந்துவிட்டேன். இந்த வீட்டை எங்களிடம் இருந்து வாங்கிய திரு.விநாயகம் தம்பதியர் எங்களிடம் சீக்கிரமாக வீட்டு வரியை சரி செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொண்டனர். அதனால் நான் மீண்டும் இன்று 12.10.2022 அன்று காலை சுமார் 10.45 மணி அளவில் மீண்டும் மாநகராட்சி அலுவலகம் சென்று திரு.கணேசனை சந்தித்து மேற்படி வீட்டிற்கு வீட்டு வரி மதிப்பீடு செய்து தருமாறு கேட்டேன். அதற்கு அவர் அப்படி மதிப்பீடு செய்ய வேண்டும் என்றால் ஏற்கனவே கூறியது போல தனக்கு ரூ.10,000/- லஞ்சமாக தர வேண்டும் என்று கூறினார். நான் அவரிடம் தொகை அதிகமாக உள்ளது, குறைத்து கொள்ளுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர் ரூ.1000/- குறைத்துக் கொண்டு ரூ.9000/-தனக்கு லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று கூறினார். மேலும் அந்த பணத்துடன் வரி மதிப்பீடு செய்ய மனு கொடுத்த திருமதி.அஞ்சுகத்துடன்

18.10.2022 அன்று தன்னை வந்து பார்த்து கொடுக்குமாறு கூறினார். எனக்கு அவருக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லை. எனவே அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.9000/-த்துடன் வந்துள்ளேன். திருமதி.அஞ்சுகத்தை பில் கலெக்டர் அலுவலகத்திற்கு நேரடியாக மதியம் வருமாறு கூறியுள்ளேன், அவர் அங்கு நேர்டியாக வருவார். மேற்படி வீட்டிற்கு வீட்டு வரி மதிப்பீடு செய்து நிர்ணயம் செய்து கொடுக்க லஞ்சமாக பணம் ரூ.9000/- கேட்ட திரு.கணேசன் மீது சட்டபடியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (Sd/-) J.H.Magesh, Honoured Sir, Received the above complaint on 18.10.2022 at 09.30hrs. A discreet enquiry was caused against Tr.M.Ganesan, Bill Collector, Ward-151, Zone-11 and confirmed above the corrupt activities and also verified the bonafide of the complainant. After getting orders from Superior Officer, registered a case in Cr.No.2/2022/AC/CC-IV U/s 7 of Prevention of Corruption (Amendment) Act 2018, dated 18.10.2022 at 10.30hrs and took up the investigation. The original FIR along with the complaint are submitted to the concerned Hon'ble Court.

18/10/2022

(C.Jansi Rani)
Inspector of Police,
Chennai City –IV,
Vigilance and Anti Corruption,
Chennai-16.